அயலகத் தமிழர் நலன்
மற்றும் மறுவாழ்வுத் துறை
ஆணையரகம்

12 DEC 2022

சேப்பாக்கம், சென்னை - 5.

E

சுருக்கம்

தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு – அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பது தொடர்பான திட்டங்களை செயல்படுத்திட ரூ.44,00,000/- – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பொது(மறுவாழ்வு.2(2))த் துறை

அரசாணை(நிலை)எண்.783

நாள்.06.12.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது – கார்த்திகை–20

படிக்கப்பட்டது.

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06–10–2021.
2. அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை, ஆணையரின் கடித ந.க.எண்.இ1/12707/2021, நாள்.27.12.2021.

*********

ஆணை:

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுவாழ் தமிழர்களின் நலன்காக்க பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அவற்றுள் பின்வரும் அறிவிப்பும் அடங்கும்.

> "கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்று அங்கே நிரந்தரமாக குடியுரிமை பெற்றுள்ள தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் கற்கும் ஆர்வத்தை உருவாக்கிடவும், தமிழ் மொழியினை கற்றிட ஏதுவாகவும், தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாக குழந்தைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுத்தல், அது மட்டுமின்றி அங்குள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிப்பதற்காக ஊக்கத்தொகை மற்றும் தமிழ் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்"

த.பி.பா..

2. மேலே, ஒன்றாவதாக படிக்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டிற்கிணங்க, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மூலம் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிக்கும் பணியினை செய்யத் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு தமிழ் இணையக் கல்விக்கழகம் வாயிலாக, அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பது தொடர்பான திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக ரூ.44,00,000/- நிதி ஒதுக்கீடு கோரி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். அக்கருத்துருவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(i) தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் முன் அனுபவம் மற்றும் தகுதியின் அடிப்படையில் ஒருங்கிணைப்பாளருக்கு ரூ.45,000/-மும், ஆய்வு வளமையருக்கு ரூ.40,000/-மும் வழங்கப்பட்டு வருகின்றது என்றும், அதனடிப்படையில் கற்றல்-கற்பித்தல் பணிகளை ஒருங்கிணைக்க புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படவுள்ள ஒருங்கிணைப்பாளருக்கு ஊதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ.30,000/- எனவும், சேவையகம் மற்றும் தொழில்நுட்ப பணிகளைத் திறமையுடன் கையாள்வதற்கு ஏற்றவாறு அனுபவமும், திறனும் வாய்ந்தவர்கள் பணியில் ஈடுபட வேண்டியுள்ளதாலும், அயலகவாழ் தமிழ் ஆர்வலர்களிடம் வெவ்வேறு கால நிலைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு ஏற்பவும் தொழில்நுட்ப வல்லுநருக்கு ஊதியமாக மாதம் ஒன்றிற்கு ரூ.40,000/- எனவும் கணக்கிடப்பட்டது.

(ii) தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் 24 நாடுகளில் 120-க்கும் மேற்பட்ட தொடர்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அத்தொடர்பு மையங்கள் மாணவர்களுக்கு அவர்களின் விருப்ப மொழியில் தமிழ் மொழியைப் பயிற்றுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் மொழியைப் பயிற்றுவிப்பதற்காகப் பன்மொழித் திறன் வாய்ந்த ஆசிரியர்கள் தோராயமாக 100 நபர்கள் தேவைப்படுவதாலும், தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாகத் தமிழ் மொழி பயிற்றுவிப்பினை மேற்கொள்ள ஏதுவாக ரூ.44,00,000/- நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தமது கடிதத்தில் அரசினைக் கோரியுள்ளார். அதன் விவரக் கூறுகள் பின்வருமாறு:

| வ. எண் | பொருள் | செலவினத் தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டு ஊதியம் (1 பாடத் திட்டத்திற்கு (30 மணி நேரம்) ஒரு மணி நேரத்திற்கு ரூ.1000 வீதம் 100 ஆசிரியர்கள்) | 30,00,000/- |

| | | |
|---|---|---|
| 2. | ஒருங்கிணைப்பாளர் – 2 (ரூ.30,000 x 12 x 2) | 7,20,000/- |
| 3. | தொழில்நுட்ப வல்லுநர் (ரூ. 40,000 x 12) | 4,80,000/- |
| 4. | இதர செலவினங்கள் (வல்லுநர் ஆலோசனை கட்டணங்கள், கூட்டங்கள்) | 2,00,000/- |
| | மொத்தம் | 44,00,000/- |

4. அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரின் கோரிக்கையை அரசு நன்கு பரிசீலனை செய்து அதனை ஏற்று, தமிழ் இணையக் கல்விக் கழகம் வாயிலாக, அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவிப்பது தொடர்பான திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக கீழ்க்கண்டவாறு ரூ.44,00,000/- க்கு நிருவாக அனுமதியும் 2022-23 நிதியாண்டிற்கு ரூ.12,00,000/- (ரூபாய் பனிரெண்டு லட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | பொருள் | செலவினத் தொகை (ரூ) (ஒரு ஆண்டிற்கு) | 2022-2023 ஆம் நிதியாண்டிற்கு ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டு ஊதியம் (1 பாடத் திட்டத்திற்கு (30 மணி நேரம்) ஒரு மணி நேரத்திற்கு ரூ.1000 வீதம் 100 ஆசிரியர்கள்) | 30,00,000 | 7,50,000 |
| 2. | ஒருங்கிணைப்பாளர் 2 (ரூ.30,000 X 12 X 2) | 7,20,000 | 2,40,000 |
| 3. | தொழில்நுட்ப வல்லுநர் (ரூ.40,000X12) | 4,80,000 | 1,60,000 |
| 4. | இதர செலவினங்கள் (வல்லுநர் ஆலோசனை கட்டணங்கள், கூட்டங்கள்) | 2,00,000 | 50,000 |
| | மொத்தம் | 44,00,000 | 12,00,000 |

த.பி.பா..

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையானது பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2235 சமூக பாதுகாப்பும் நலனும் 01 மறுவாழ்வு – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AH வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்
305 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லறைச் செலவுகள் – ரூ.50,000/–
(த.தொ.கு.2235 01 800 AH 30502)
333 தொழில்முறை, சிறப்புச் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம் – ரூ.7,50,000/–
(த.தொ.கு.2235 01 800 AH 33302)
333 தொழில்முறை, சிறப்புச் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம் – ரூ.4,00,000/–
(த.தொ.கு.2235 01 800 AH 33304)"

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின் நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வ.செ.பொ.–I)துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தை 2022–2023ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய விளக்கக் குறிப்பினையும் மற்றும் 2022–2023ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதித்(பொது/வ.செ.பொ.–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

த.பி.பா.,

7. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அ.சா.எண்.45071/நிதி(பொது)/ 2022, நாள்.02.12.2022 மற்றும் கூடுதல் பேரேட்டு எண்.1935 (ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து) இன்படி நிதித்துறையின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No.2022121935).

(ஆளுநரின் ஆணைப்படி)

டி.ஜகந்நாதன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

ஆணையர்,
அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை
ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை-5.

இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்கம்,
தமிழ்வளர்ச்சி வளாகம்,
முதல் தளம், தமிழ்ச் சாலை, எழும்பூர் சென்னை-8.

சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-9.

மாநில முதன்மை கணக்காயர், சென்னை-18.

நகல்

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை-9 (கோ.எண்.40683/ம.வா.2(1)/2021)
சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு
வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம்,
சென்னை-9.
நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர்
அலுவலகம், சென்னை-9.
நிதி(பொது/வ.செ.I/II/வ.வ-I)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9.
பொது(ம.வா.1/ம.வா.3/அ.ந.மு.1/பல்வகை)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

இ.கோ./உ.கோ.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

ச. அன்புமணி
7/12/22
பிரிவு அலுவலர்
7/12/2